

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (20.7.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா மற்றும் நிர்வாகிகள் வி.பி. மணி, எஸ். வெங்கடேஷ், ஜி. சக்திவேல், எம்.கே.ஜி. ஆனந்த குமார், எஸ். வின்சன்ட், எம். ஆனந்த் ஆகியோர் சந்தித்து, 300 சதுர மீட்டருக்குள் கட்டட பரப்பளவு கொண்ட 14 மீட்டர் உயரத்திற்குள் உள்ள வணிகக் கட்டடங்களுக்கு கட்டட நிறைவுச் சான்றிதழ் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்து, கோரிக்கை மனு அளித்தனர். உடன் பொள்ளாச்சி தொழில் மற்றும் வர்த்தக சபையின் தலைவர் எஸ். வெங்கடேஷ் மற்றும் பொள்ளாச்சி வட்டார சிறு வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் ஜி. சக்திவேல் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.7.2024) தலைமைச் செயலகத்தில், திருச்சி – தமிழ் இவாஞ்சிலிக்கல் லுத்தேரியன் திருச்சபையின் (TELC) தலைவர் அருட்தந்தை கிரிஸ்டியன் சாம்ராஜ், செயலாளர் ஆர். தங்கபழம், நிர்வாகிகள் ஸ்டான்லி தேவகுமார், எஸ். ஞானப்பிரகாசம், குணாளன் பாக்கியராஜ், தாமஸ் கென்னடி, அடைக்கலசாமி, டி. அகஸ்டின், ஜெ.ஜி. ஜேக்கப் சுந்தர்சிங், சாம்சன் ஞானராஜ், ஜெ. பால் மோகன் ஆகியோர் சந்தித்து, தமிழ்நாட்டில் முதன் முதலில் அச்சு இயந்திரத்தை நிறுவி தமிழுக்குப் பெருமை சேர்த்த சீகன் பால்கு அவர்களுக்கு சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

### சென்னை - சைதாப்பேட்டை - பெண்கள் மேனிலைப் பள்ளியில் - 11ஆம் வகுப்பு பயிலும்

# மாணவ - மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்!

## அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் - மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தனர்!

சென்னை, ஜூலை 21-

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நடப்பு கல்வி ஆண்டில், 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை, சென்னை சைதாப்பேட்டை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி வைத்தனர்.

தமிழ்நாடு அரசு, மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவ - மாணவியர் சிரமமின்றி பள்ளிக்கு செல்லும் வகையில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ - மாணவியருக்கும் ஆண்டுதோறும் மிதிவண்டிகள் வழங்கி வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் 823.09 கோடி செலவில் 16,73,274 மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பள்ளிகள் திறந்த உடன், மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகள் வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதன்படி, நடப்பு கல்வியாண்டில் சுமார் 264.10 கோடி ரூபாய் செலவில், அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 5,47,676 மாணவ /மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இதன் துவக்கமாக, நேற்று (20.07.2024), சென்னை, மேற்கு சைதாப்பேட்டையில் அமைந்துள்ள சென்னை பெண்கள் மேல்நிலை (மாந்தோப்பு) பள்ளி வளாகத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மற்றும் மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பெருமக்கள், 10 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கி 2024 - 2025 ஆம் கல்வி ஆண்டிற்கான திட்டத்தினை துவக்கி வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சா.விஜய ராஜ் குமார், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர்தி.ந.வெங்கடேஷ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் வா.சம்பத், சிறுபான்மையினர் நல இயக்குநர் திருமதி மு.ஆசியா மரியம், சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் கண்ணப்பன், பெருநகர சென்னை மாநகராட்சி (தெற்கு) மண்டல துணை ஆணையர் பிரவீன்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி கல்வி நிலைக்குழுத் தலைவர் விஸ்வநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் துரைராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீதர், சுப்பிரமணி, மோகன் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் - அவிநாசி - ஊத்துக்குளி ஒன்றிய பகுதிகளில்

# 544 பயனாளிகளுக்கு ரூ.8.22 கோடி மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆணைகளை வழங்கினார்!

திருப்பூர், ஜூலை 21-

திருப்பூர் ஒன்றியம், கணக்கம் பாளையம் ஸ்ரீ கிருஷ்ணா மஹாலில் 19.07.2024 வெள்ளிக்கிழமை அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை யின் சார்பில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி தலைமையில், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ், மாநகராட்சி மேயர், வடக்கு மாநகர கழக செயலாளர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் திருப்பூர் ஒன்றியத்திற்குட்பட்ட 54 பயனாளிகளுக்கு தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.1.89 கோடி மதிப்பீட்டிலும், அவிநாசி ஒன்றியத்திற்குட்பட்ட 56 பயனாளிகளுக்கு தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.1.96 கோடி மதிப்பீட்டிலும், ஊத்துக்குளி ஒன்றியத்திற்குட்பட்ட 52 பயனாளிகளுக்கு தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.1.82 கோடி மதிப்பீட்டிலும், தொகுப்பு வீடுகள் பராமரிப்புக்கு 382 பயனாளிகளுக்கு ரூ.2.55 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 544 பயனாளிகளுக்கு ரூ.8.22 கோடி மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள், ஊரக வீடுகள் பழுது பார்த்தல்திட்டப்பணிகளுக்கான ஆணைகளை வழங்கினார்.

அமைச்சர் தெரிவித்தாவது :தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்துத்துறைகளின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானாலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் திருப்பூர், அவிநாசி மற்றும் ஊத்துக்குளி ஒன்றியத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள், ஊரக வீடுகள் பழுது பார்த்தல் திட்டப் பணிகளுக்கான ஆணைகளும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக்குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதி எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் உலகிற்கே முன்னோடியாக தமிழ்நாட்டில் அனைத்து ஊரக பகுதிகளில் உள்ள அரசு நிதியுதவிபெறும் தொடக்கப்பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப்படுத்தி 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் தொடங்கி வைத்தது வரை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். திருப்பூர் மாவட்டத்திலுள்ள 10 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பட்டு வரும் 31 அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 1,742 மாணவ, மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி தொடங்கி வைக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. திருப்பூர் மாவட்டத்திலுள்ள 251 கிராம ஊராட்சிகளில் அரசு பள்ளி மாணவ, மணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் 1,081 பள்ளிகளில் தொடங்கப்பட்டு 75,482 பள்ளி மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

புதுமைப்பெண் என்கிற திட்டத்தை துவக்கி வைத்தார்கள். தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு / பட்டயப்படிப்பு / பட்டப் படிப்பு/ தொழிற்கல்வி ஆகியவற்றில் இடை நிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000/ அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் அரசுப்பள்ளியில் படித்து உயர்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000/ அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படும் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கவுள்ளார்கள்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்பதை இலக்காக வைத்து தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த கான்கிரீட் வீடுகள் கட்டித் தரும் முன்னோடி திட்டத்தை விரிவுபடுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குடிசைகள் இல்லாத மாநிலமாக தமிழ்நாடு உருவாக வேண்டும் என்ற அடிப்படையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தினை உருவாக்கி வீடுகள் கட்டி தரப்படவுள்ளது. உங்களுக்கான வீட்டினை பராமரிப்பு செய்து நீண்ட நாட்களுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் கழக மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் செ. உமாமகேஸ்வரி, வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.விஸ்வநாதன், பி.பி.ஈஸ்வரசாமி, வே.ராஜா, சுப்பிரமணியம், நகர கழக செயலாளர் ந.ராஜேந்திர குமார், பல்லடம் நகர் மன்ற தலைவர் கவிதா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வேலுச்சாமி திருப்பூர், பாலசுப்பரமணியம் ஊத்துக்குளி, விஜயகுமார், ரமேஷ் அவிநாசி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் சண்முகசுந்தரம் கணக்கம்பாளையம், முருகேசன் (வள்ளிபுரம்), வடக்கு மாவட்ட அவைத்தலைவர் க.நடராஜன், வடக்கு மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, பகுதி கழக செயலாளர் வெ.ஜோதி, பேரூர் கழக செயலாளர் சென்னியப்பன், கணக்கம் பாளையம் துணைத் தலைவர் சி.வீரக்குமார், முன்னாள் தலைவர் சி.வேல்குமார் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ஆ.ராசா எம்.பி. தலைமை! புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

# மாஞ்சான் விடுதி வே.சுரேஷ்கண்ணன் இல்ல விழா!

## எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்ல பாண்டியன் - ஆ.கிருஷ்ணசாமி வாழ்த்துரை!

புதுக்கோட்டை ஜூலை 21-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளரும், மாஞ்சான்விடுதி ஊராட்சி மன்ற தலைவருமான வே.சுரேஷ்கண்ணன், சு.ஜீவிதா ஆகியோரது குழந்தைகள் சு.ஜெய்ஷனா ஸ்ரீ சு.சுமித்ரன் ஆகியோரது காதணி விழா இன்று (21.07.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் வம்பன் 4ரோடு மகாலெட்சுமி கோகிலாம்பாள் மனமகிழ் மன்றத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா தலைமையில் நடைபெறுகிறது. திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பி.கே.டி.தங்கமணி வரவேற்புரையாற்றுகிறார். சட்டத்துறை அமைச்சர், தெற்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இந்நிகழ்வுகளில் கழக ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, பெரியண்ணன் அரசு, கழக இலக்கிய அணி துணைத்தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், கம்பன் கழக தலைவர் தொழிலதிபர் முத்துப்பட்டினம் எஸ்.ராமச்சந்திரன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, எம்.எம்.அப்துல்லா எம்.பி, எம்.சின்னதுரை எம்.எல்.ஏ, கழக .விவசாய தொழிலாளர் அணி துணைத்தலைவர் த.சந்திர சேகரன், தொழிலதிபர் கரு.ரெத்தினம், தொழிலதிபர் ப.கரிகாலன், கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி, , பி.டி. அரசக் குமார், புதுக்கோட்டை விஜயா, கீரை.தமிழ்ராஜா, ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், பரணிஇ.ஏ.கார்த்திகேயன், ஞான இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, எம்.ராஜேந்திரன், வள்ளியம்மை தங்கமணி, மேயர் திலகவதி செந்தில், என்.பாலசுப்பிரமணியன், ராசி முருகானந்தம், கே.எஸ்.ரவி, மகேஸ்வரி சண்முகநாதன், கே.சி.சிவக்குமார், அரு.வடிவேல், ரெ.தங்கம், ஆ பழனிக்குமார், மா.நடேசன் மேகலா முத்து, எம்.எம்.பாலு, உஷா செல்வம், இராசு. சந்தோஷ், இரா.கணேசன் சி.மகிலன், வி.முருகானந்தம், தீபா ஆறுமுகம், எஸ்.கவிவர்மன், தொழிலதிபர் தெ.வீரப்பன், ஏ.ஸ்ரீதர் எஸ்.எம்.சி. இளைய சூரியன், மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டு குழந்தைகளை வாழ்த்துகின்றனர்.

முடிவில் மாஞ்சான் விடுதி ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ் கண்ணன் நன்றி கூறுகிறார்.

### நாளை தொடங்குகிறது!

# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!

புதுடெல்லி, ஜூலை 21–

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் ஜூலை 22ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 12 வரை நடைபெற உள்ளது. முதல்நாளிலேயே பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட உள்ளது. அதனைத் தொடர்ந்து, ஜூலை 23ம் தேதி ஒன்றிய நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. மேலும், இக்கூட்டத் தொடரில் நிதி மசோதா, பேரிடர் மேலாண்மை மசோதா, கொதிகலன்கள் மசோதா உள்ளிட்ட 6 மசோதாக்களை தாக்கல் செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கிடையே, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா நாடாளுமன்ற கூட்டத்தொடரின் நிகழ்ச்சி நிரல்களை தீர்மானிக்கும் அலுவல் ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளார். இக்குழுவில் பா.ஜ.க.வைச் சேர்ந்த அனுராக் சிங் தாக்கூர், நிஷிகாந்த் துபே, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கே.சுரேஷ், கௌரவ் கோகோய் ஆகியோரும், தி.மு.க. சார்பில் தயாநிதி மாறன், திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் சுதீப் பந்தோபாத்யாய், சிவசேனா சார்பில் அரவிந்த் சாவந்த் உள்ளிட்டவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில், நாடாளுமன்றக் கூட்டத் தொடரை சுமூகமாக நடத்துவது குறித்து விவாதிப்பதற்காக ஒன்றிய அரசு அழைப்பு விடுத்துள்ள அனைத்துக்கட்சிக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தலைமையில் இன்று காலை 11 மணிக்கு கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை தொடங்கும் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில், நீட் தேர்வு முறைகேடுகள், அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம், தொடர் ரயில் விபத்துக்கள் உள்ளிட்ட பிரச்சினைகளை இந்தியா கூட்டணிக் கட்சிகள் எழுப்ப உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.





சென்னை, மேற்கு சைதாப்பேட்டையில் அமைந்துள்ள சென்னை பெண்கள் (மாந்தோப்பு) பள்ளி வளாகத்தில், நேற்று (20.07.2024) பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் 2024 – 2025 ஆம் நடப்பு கல்வி ஆண்டில், 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்து மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கினர். இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சா.விஜயராஜ்குமார், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் தி.ந.வெங்கடேஷ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் வா.சம்பத், சிறுபான்மையினர் நல இயக்குநர் திருமதி மு.ஆசியா மரியம், சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, பள்ளி கல்வித்துறை இயக்குநர் கண்ணப்பன் பெருநகர சென்னை மாநகராட்சி (தெற்கு) மண்டல துணை ஆணையர் பிரவீன்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி கல்வி நிலைக்குழு தலைவர் விஸ்வநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி 10வது மண்டல குழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீதர், சுப்பரமணி, மோகன் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறனை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். உடன் திருமதி. பாரதி மணிமாறன், திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன், மாவட்டச் செயலாளர் வைரமணி, கழக நிர்வாகிகள் மா.ஜெயராமன், செல்லம்பட்டி முத்துராமன், எஸ்.ஓ.ஆர்.தங்கபாண்டியன், ரம்யா முத்துக்குமார், மதன்குமார், சிவமுருகன், காளிதாஸ், வெற்றி மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.